## 3.3 மனைப்பிரிவு–பேரூராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளை முறைப்படுத்துவதற்கு ஏதுவாக விதிக்கப்பட்ட நிபந்தனைகளை தளர்த்தி – ஆணை வழங்கப்படுகிறது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.1) துறை

அரசாணை (நிலை) எண்.16 நாள் : 1.2.2001

படிக்க :

1) அரசாணை (நிலை) எண். 130 ந.நி.ம.கு.வ. (நநி.1) துறை, நாள் 3.6.99

2) அரசு கடித எண். 26331. ந.நி. 1/99–8 நாள் 30.9.99

3) அரசு கடிதம் எண். 26331/ந.நி 1/99–10 நாள்8.1.2000

4) அரசாணை (நிலை) எண் 79 ந.நி.ம.கு.வ. (நதி 1) துறை, நாள் 16.6.2000

5) நகராட்சி நிர்வாக ஆணையாளர் கடிதம் எண். 15559/99/டிபி3, நாள் 24.1.2001

**ஆணை**

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் சென்னைப் பெருநகர் பகுதி நீங்கலாக உள்ள மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் உள்ள அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளை முறைப்படுத்திக் கொள்ள அரசு ஆணையிட்டது. அதில், மனை உரிமையாளர்கள் 30.9.99க்குள் தங்கள் மனைப்பிரிவை முறைப்படுத்திக்கொள்ள நகர்ப்புற உள்ளாட்சிக்கு விண்ணப்பிக்க வேண்டும் என்றும், நகர்ப்புற உள்ளாட்சி 30.11.99க்குள் அந்த மனைப்பிரிவை முறைப்படுத்தி இறுதி ஆணை வெளியிடவேண்டும் என்றும் ஆணையிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து பார்வை இரண்டு முதல் நான்கு வரையில் உள்ள கடிதங்கள் மற்றும் அரசு ஆணை மூலம் சில நிபந்தனைகளைத் தளர்த்தி ஆணையிடப்பட்டது.

2. அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளை முறைப்படுத்த மேலும் கால நீட்டிப்பு வழங்கலாம் என்றும் அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுதாரர்கள் செலுத்த வேண்டிய 1 ½ மடங்கு அபிவிருத்திக் கட்டணத்தை ஒரு மடங்காகக் குறைக்கலாம் என்றும் இம்மனைப் பிரிவுகளை முறைப்படுத்த, முறைப்படுத்தும் கட்டணம் ஒன்று நிர்ணயம் செய்து வசூலிக்கலாம் என்றும் நகராட்சி நிர்வாக ஆணையாளர் அரசுக்கு பரிந்துரைத்துள்ளார்.

3. நகர்ப்புற பகுதிகளில் அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளை முறைப்படுத்தி அப்பகுதிகளுக்கு அடிப்படை வசதிகள் உள்ளாட்சி அமைப்புகள் மூலம் ஏற்படுத்த வேண்டும் என்று சட்டமன்ற உறுப்பினர்களும், பொதுமக்களும், உள்ளாட்சி நிறுவனங்களும், பல்வேறு குடியிருப்புச் சங்கங்கம் அரசுக்கு விண்ணப்பித்த வண்ணம் உள்ளனர். இந்தப் பிரச்சினை குறித்து ஏற்கனவே ஆணைகள் பிறப்பித்தும் விளக்கங்கள் அளித்தும் நிபந்தனைகளைத் தளர்த்தியும் அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுதாரர்களிடமிருந்து பெருமளவில் விண்ணப்பங்கள் வரப்பெறாததால், நகர்ப்புறப் பகுதிகளில் அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளில் வாழும் பொதுமக்களுக்கு அடிப்படை வசதிகள் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்துடன், தீவிர பரிசீலனைக்குப்பின், அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளை முறைப்படுத்த மேலும் சில சலுகைகளை அளிக்க அரசு முடிவெடுத்துள்ளது. எனவே, இப்பொருள் குறித்து ஏற்கனவே வெளியிடப்பட்ட ஆணைகளில் நிர்ணயிக்கப்பட்ட நிபந்தனைகளைத் தளர்த்தி, பின்வருமாறு அரசு ஆணையிடுகிறது.

(1) சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் ஆளுமைக்குட்பட்ட பகுதியை தவிர இதர மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் உள்ள அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளில் 22.9.2000க்கு முன்பு குறைந்தது 50 விழுக்காடு மனைகள் விற்கப்பட்டோ அல்லது கட்டடங்கள் கட்டப்பட்டு இருக்கும் மனைப்பிரிவுகளுக்கு அங்கீகாரம் வழங்கப்படும்.

(2) அங்கீகாரம் கோரும் இம்மனைப்பிரிவுகளில் உள்ள சாலைகளின் மொத்த நீளத்தில் குறைந்தது 75 விழுக்காடு சாலைகள் 20 அடி அகலத்திற்கு குறையாமல் இருந்தால் போதும்.

(3) அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளுக்கு செலுத்தப்படவேண்டிய அபிவிருத்திக் கட்டணமாக ஒன்றரை மடங்கு செலுத்த வேண்டும் என்ற நிபந்தனைக்குப் பதிலாக, அங்கீகரிக்கப்பட்ட மனைப் பிரிவுகளுக்கு கட்ட வேண்டிய அபிவிருத்திக் கட்டணமான ஒரு மடங்கை மட்டும் கட்டினால் போதும்.

(4) அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவில் உள்ள மொத்த பரப்பளவில் 10 விழுக்காட்டிற்கும் குறைவாக பொது பயன்பாட்டிற்கான நிலம் இருக்குமேயானால், எந்த அளவிற்கு குறைவாக இருக்கின்றதோ அதற்கு ஈடான நிலத்தின் மதிப்பை தற்போதைய வழிகாட்டி பதிவேட்டின்படி 50 விழுக்காடு மட்டும் செலுத்தினால் போதும்.

(5) இத்திட்டத்தின்கீழ் பயன்பெற முறைப்படுத்தும் கட்டணமாக (Regularisation Fees) மாநகராட்சிப் பகுதிகளில் மனையின் பரப்பளவில் ஒரு சதுர மீட்டருக்கு ரூபாய் 20–ம், (ரூபாய் இருபது மட்டும் நகராட்சிப் பகுதிகளில் ஒரு சதுர மீட்டருக்கு ரூபாய் 10–ம், (ரூபாய் பத்து மட்டும்) பேரூராட்சிப் பகுதிகளில் ஒரு சதுர மீட்டருக்கு ரூபாய் 3–ம் (ரூபாய் மூன்று மட்டும்) செலுத்தினால் போதும்.

(6) இத்திட்டத்தின்கீழ் பயன்பெற விரும்புவோர்கள் 30.6.2001க்கு முன்னர் அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கு விண்ணப்பம் செய்து கொள்ளலாம்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**சு. மாலதி**

அரசுச் செயலார்